பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 28 | வியாழக்கிழமை | 11.04.2024 | அதிர்வு 254

## புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15 அரச விடுமுறை

தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமையும் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, 06



# மரணத்தின் விளிம்பில் இருந்து மக்களை மீட்ட தலைவரே ரணில்

## அமைச்சர் ஹரீன் புகழாரம்




**நாட்டு மக்களை மரணத்தின் விளிம்பில் இருந்து மீட்டெடுத்த ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று சுற்றுலா, காணி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.** 06

## செந்திலும் ஜீவனும் கூட்டு நாடகம்

### வேலுகுமார் எம்.பி. விளாசல்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விடயத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பொதுச்செயலாளரும் கூட்டு நாடகத்தை அரங்கேற்றி வருகின்றனர் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் கூறுகையில்,

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 06



கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு ஓடியமையை அடுத்து புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு நாடாளுமன்றத்தில் நடந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் போட்டியிட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.

முன்னாள் ஜனாதிபதிகள் குறித்து அவர் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ள நான்கு முன்னாள் ஜனாதிபதிகளும் தமது சொந்த நலனுக்காகவும், மக்களுக்காகவும் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டுமென டலஸ் அழகப்பெரும கோரியிருக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால 06




# யாழ். படை தலைமையக ஏற்பாட்டில் நேற்றுப் புத்தாண்டுக் கொண்டாட்டம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படை தலைமையகத்தின் ஏற்பாட்டில் தமிழ் - சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுக் காலை 9 மணி முதல் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இந்திய துணைத்தூதர் சாய் முரளி, வடக்கு மாகான கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், மற்றும் 51, 52,55ஆம் படைப் பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள், படைத் தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது பாரம்பரிய விளையாட்டுக்களான கிறிஸ் மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல், கோலம்போடுதல், முட்டி உடைத்தல், தேங்காய் திருவுதல், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் மற்றும் சிறார்களுக்கான யானைக்கு கண் வைத்தல், நீர் நிரப்புதல், பணிஸ் உண்ணுதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

மேலும் தமிழ், சிங்கள கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் கலாச்சார நடனங்கள், றபான் அடித்தல் போன்றனவும் இடம்பெற்றன.

இதன் போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கழக வீரர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், இராணுவ வீரர்கள் எனப் பலரும் போட்டிகளில் கலந்துகொண்டனர். போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன.



















# பாதுகாப்பு அமைச்சின் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றார்

பாதுகாப்பு அமைச்சின் நலன்புரிப் பிரிவினால் பத்தரமுல்லையில் உள்ள பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமை அளித்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த புத்தாண்டு கொண்டாட்டம் பல பாரம்பரிய விளையாட்டுகளை உள்ளடக்கியிருந்ததோடு, பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களின் கலாச்சார நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

புத்தாண்டு விழா நடைபெறும் வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு பாதுக்காப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்னவால் வரவேற்பளிக்கப்பட்டதோடு, புத்தாண்டு அழகி போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு ஜனாதிபதி பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் , ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களும் கலந்துகொண்டனர்











# இலங்கையின் இறைமைக்கு அமெரிக்காவின் முழு ஆதரவு

## ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உறுதி

இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்குமென ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று நடந்த தொலைபேசிக் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

விரைவான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் பாராட்டியுள்ளார்.

அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பொது நிதி, பணம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுகின்றோம் எனவும் சலிவன் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு, இந்து - பசுபிக் வலயத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கான இருநாடுகளினதும் அர்ப்பணிப்பையும் வலியுறுத்துகிறது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# விடுவிக்கப்பட்ட நிலங்களைப் பார்வையிட அனுமதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் வசாவிளான் பகுதியில் விடுவிக்கப்பட்ட நிலங்களை நில உரிமையாளர்கள் இன்று பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி விடுவிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்ட வசாவிளான் பகுதி நிலங்களே இன்று பார்வையிட அனுமதிக்கப்படுகின்றது.

விடுவிக்கப்பட்ட 234 ஏக்கர் நிலங்களின் உரிமையாளர்கள் தமது கிராமசேவகர்களிடம் உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்று நிலங்களைப் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வசாவிளானில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்கள் 33 ஆண்டுகளின் பின்பு இன்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# மின்சார சபை ஊழியர் விபத்தில் சிக்கி மரணம்

நுரைச்சோலை நகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

26 வயதுடைய சமிர லசந்த பெர்னாண்டோ எனும் இளைஞரே சாவடைந்துள்ளார்.

அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தேங்காய் ஏற்றிச் சென்ற லொறியுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேற்படி இளைஞர் நுரைச்சோலை - கொய்யாவாடிய பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு இவர் மின்சார சபையில் பணியாற்றும் ஊழியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை விஷ்ணு கோயிலுக்கு முன்பாக உள்ள வீதியில் வேகமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் முள்ளியவளையைச் சேர்ந்த திரு லோகச்சந்திரன் கேதீஸ்வரன் என்ற 18 வயதுடைய இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் 17 வயதுடைய இளைஞர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.




# மக்களை பொருளாதார பங்குதார்களாக்குவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

"கல்வி, காணி, வீடு, வியாபார உரிமைகளை உறுதிப்படுத்தி. மக்களை பொருளாதாரத்தில் வலுவான பங்குதாரர்களாக மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றோம். பொருளாதாரத்தின் பங்குதாரர்களாக மக்களை மாற்றுவதன் மூலம், சரிவடையாத வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில் நடைபெற்ற ரன்திய உயன வீட்டுத் தொகுதியை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது 2010 ஆம் ஆண்டில் கஜீமாவத்தையில் தீக்கிரையான வீடுகளுக்கு பதிலாக 294 வீடுகள் அடங்கிய இந்த வீட்டுத்தொகுதியை ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளித்தார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

"பத்து வருடங்களுக்கு மேலாக காஜிமாவத்தை மக்கள் நரகத்தில் வசித்துள்ளனர். அந்த வாழ்க்கையை கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அதனால் இந்த குடியிருப்புகளை மக்களுக்கு விரைவில் கையளிக்க முடிந்துள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க இது தொடர்பில் அதிக அக்கறை காட்டினார். இன்று நீங்கள் பெற்றுகொள்ளும் இந்த வீடு உங்களுக்கு மிகவும் மதிப்புள்ள சொத்தாகும். அதனைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. கடந்த பத்து வருடங்களாக கஷ்டப்பட்ட நீங்கள் இந்த வீடுகளை அடகு வைக்கவோ விற்கவோ கூடாது. இந்த வீடுகளை உங்கள் உயிரைப் போல பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இன்று வரையிலான இரண்டு வருடங்களுக்குள் நிம்மியாக மூச்சு விடக்கூடிய சூழலை எம்மால் உருவாக்க முடிந்துள்ளது. உணவு, எரிவாயு, எரிபொருள் வரிசையில் நின்று அவதிப்பட்ட மக்கள் இன்று சுமூகமாக வாழ்கின்றனர். வரிசையில் யுகத்தில் கொழும்பு மக்கள் பெரும் அவதிப்பட்டனர். அதிலிருக்கும் மாடிக்குடியிருப்புகளிலும், தோட்டங்களிலும் வசிக்கும் மக்களும் கடும் அவதிக்குள்ளாகினர்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்த நாம் அமுல்படுத்திய வரிக் கொள்கை வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகப்படுத்தியது. ஆனால் அந்த கஷ்டங்களை நீங்கள் தாங்கிக் கொண்டதாலேயே, கடன் வாங்காமலும், பணம் அச்சடிக்காமலும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது. அதனால் தான் இந்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடிந்தது. ரூபாவின் பெறுமதியும் வலுவடைந்துள்ளது.

அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்றிக் கூறும் வகையிலேயே நிரந்தர காணி உரிமை, நிரந்தர வீட்டுரிமையை வழங்குவதாக கருதுகிறேன். எதிர்காலத்தில் 50,000 வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும். நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1996 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளையும் இரண்டு வருடங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம்.

காணி, வீட்டு உரிமைகளுக்கான நிரந்தர உரிமைகள் இதற்கு முன்னதாக வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் கல்வி,காணி, வீட்டு, வியாபார உரிமைகளை மக்களுக்கு வழங்கி பொருளாதாரத்தை மக்கள் பக்கம் விரிவுபடுத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கான பெரும் பங்களிப்பை அதனூடாக பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறேன்." – என்றார்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டுமென அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

“அரசியலில் இருந்து விலகி இருப்பது அவர்களின் சொந்த ஆரோக்கியத்திற்கும், மக்களின் நலனுக்கும் நல்லது. முன்னாள் ஜனாதிபதிகள் என்ற முறையில் அவர்களுக்காக செலவிடப்படும் பொது நிதியை தமது எந்த அரசியல் விஷயத்திற்கும் சாதகமாக அவர்கள் பயன்படுத்தக்கூடாது” என்று அவர் குறிப்பிட்டார்.

ஓரளவுக்கு நியாயமான கோரிக்கை தான். ஆனால் அரசியலில் ஊறிய இரத்தம் சும்மா இருக்க விடாதே....!

\+ \+ \+

இலங்கையின் சில பகுதிகளில் வெப்ப நிலை மோசமாக அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாகவடக்கு,மேற்கு,சப்ரகமுவமற்றும் வடமேற்கு மாகாணங்கள் மற்றும் அனுராதபுரம், காலி, மாத்தறை மாவட்டங்களில் வெப்பச் சுட்டெண் வரவிருக்கும் நாள்களில் எகிறும் என அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

அதனால் இப்பிரதேசங்களில் மக்கள் தாங்க முடியாத வெப்பத்தால் – சூட்டால் – அந்தரிக்கும் நிலைமை ஏற்படும் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், புத்தளம், குருநாகல், கம்பஹா, கேகாலை, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய 15 மாவட்டங்களில் மாத்திரமே இந்த அனல் நிலைமை நிலவுமாம்.

இந்த அனல் பறக்கும் சூடு உடல்நல அபாயங்களை சாத்தியமாக்கும் என எச்சரிக்கப்படுகின்றது.

குறிப்பாக வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் முன்பே சுகாதாரப் பிரச்சினைகள் உள்ள தனிநபர்கள் போன்றோர் அதிகம் பாதிக்கப்படக் கூடும்.

இப்படி அளவுக்கு மீறிய வெப்பம், குழப்ப மனநிலையில் இருப்போரை விரைவில் – இலகுவாக – மேலும் குழப்பி விடும் எனவும் கூறப்படுகின்றது.

ஆகையால், வெயில் கிளப்பும் சூடு குறித்தும் கவனமாக இருங்கள். அந்தச் சூட்டினால் குழம்பி வருபவர்கள் குறித்தும் இக்கால கட்டத்தில் உஷாராக இருங்கள்....!

## செந்திலும் ஜீவனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

30 நாள்களுக்குள் சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சூளுரைத்திருந்தது. ஆனால், இன்று (நேற்று) 27 நாள்கள் கடந்துவிட்டன. எனினும், சம்பள உயர்வு தொடர்பில் முன்னேற்றகரமாக எதுவும் நடக்கவில்லை.

இதற்கு இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் கூட்டு நாடகமே பிரதான காரணமாகும். ஆளுங்கட்சிப் பக்கம் நின்று பதவிகளை வகித்தாலும், அந்தப் பதவி நிலையைத் தொழிலாளர்களின் நன்மைக்காக அவர்கள் பயன்படுத்துவதில்லை. மாறாக அரசைத் திருப்திப்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

தங்களின் இந்தக் கூட்டு நாடகத்தை மூடிமறைக்கவே ஏனைய தொழிற்சங்கங்கள் மீது அவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.” – என்றார்.

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் கடந்த வருடம் மட்டும் 71 பேர் சாவு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் 2023ஆம் ஆண்டு மட்டும் 776 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் 71 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி யமுனானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் சரியான உணவுப் பழக்கம் புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருபவர்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், சூலகப் புற்றுநோய், வாய்ப் புற்றுநோய், சுவாசம், தொண்டைப் பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய், உடல் உள் உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய் எனப் பல வகையான புற்றுநோய்கள் இனம் காணப்படுகின்றன.

புற்றுநோயைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகளை ஒழுங்காக மேற்கொள்ளும்போது நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் குடல் புற்றுநோய் காரணமாக 88 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 7 பேர் இறந்துள்ளனர். இரைப்பைப் புற்றுநோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 5 பேர் இறந்துள்ளனர். ஈரல் புற்றுநோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 8 பேர் இறந்துள்ளனர். சுவாசப் புற்றுநோயால் 67 பேர் பாதிக்கப்பட நிலையில் 8 பேர் இறந்துள்ளனர். மார்பகப் புற்றுநோயால் 83 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 4 பர் இறந்துள்ளனர். கருப்பைப் புற்றுநோயால் 27 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் இறந்துள்ளனர். கருப்பைக் கழுத்துப் புற்றுநோயால் 48 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் இறந்துள்ளனர்.

மேலும் ஆண்களில் சிறுநீர்ப்பைப் புற்றுநோயால் 10 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குருதிப்பட்டி நோயால் 37 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆண்களில் முன்னாண் மற்றும் நரம்பியல் சார்ந்த புற்றுநேய்களால் 30 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தைரொய்டு புற்றுநோயால் 20 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.” – என்றார்.

## மரணத்தின் விளிம்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பு முகத்துவாரத்தில் நடைபெற்ற ரன்திய உயன வீட்டுத் தொகுதியைப் பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட இந்நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

“2022 ஆம் ஆண்டை விடவும் இன்று பத்து மடங்கு நிம்மதியாக மூச்சு விடக்கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார். அக்காலத்தில் மூன்று வேளை உணவு கேள்விக்குறியாகக் காணப்பட்டது. மக்கள் வரிசைகளில் நின்று அவதிப்பட்டனர்.

அப்போதைய ஆட்சியாளர்கள் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுமாறு பலமுறை கோரியிருந்த போதும், அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் எவரும் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் தனியொரு ஆசனத்தை மட்டும் பெற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு மக்கள் வாழ்க்கைக்குத் தகுந்த பொருளாதார நிலையை உருவாக்கினார். அதன்படி கடந்த 23 மாதங்களில் நாட்டை முன்னைய பொருளாதார நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

இன்று, புறக்கோட்டை, மஹரகம, பதுளை அல்லது இலங்கையின் எந்த நகரத்திலும், பெருந்திரளான மக்கள் பண்டிகைக் காலத்தில் பெருமளவில் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் மீண்டுள்ளது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணமாகும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றிருக்காவிடின் இன்று நாட்டின நிலை என்னவென்பதை சிந்தித்துப் பாருங்கள்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் இன்று விவாதத்துக்கு அழைப்பு விடுக்கும் எதிர்க்கட்சிகளிடம், ஏன் அன்று சவாலை ஏற்கவில்லை என்று கேட்க வேண்டும். அந்தக் குழுக்களுக்கு பொருளாதாரக் கோட்பாடு மட்டுமே தெரியும். அவர்களுக்கு நடைமுறை பொருளாதாரம் தெரியாது. அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கவும் ஜனாதிபதி ஏற்பாடு செய்தார். தொழிலாளர்களுக்காகப் பேசும் எந்தக் கட்சியும் இவ்வளவு சம்பளத்தை அதிகரிக்கவில்லை.

இன்று ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது. நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் மீது சர்வதேச சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளதாலேயே இவை அனைத்தும் நடக்கின்றன. மீண்டும் தவறு செய்தால் நம்மை விட நம் குழந்தைகள் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.” – என்றார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சட்டத்தரணி நவீன் திஸாநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சத்தியானந்த சுபசிங்க, ஜனாதிபதி தொழிற்சங்க அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டை முன்னிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

# ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் இஸ்ரேலிய அமைச்சர் எச்சரிக்கை

தங்களது நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் ஈரான் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடுமென இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல் போக்கானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

இந்த நிலையில், காஸா மீது கடந்த 6 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திவரும் போருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருவதால் இரு நாடுகளுக்கு இடையேயும் போர் மூளும் சூழல் ஏற்போது ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் சிரியாவின் டமாஸ்கசில் உள்ள ஈரான் துணை தூதரகத்தின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஈரான், விரைவில் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

இந்த நிலையில், ஈரான் தம் மீது தாக்குதல் நடத்தினால், தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் ஈரான் மீது நேரடியாக தாக்குதல் நடத்தப்படும் என்றும் இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அமெ. பாடசாலையில் துப்பாக்கிச்சூடு நடத்தி மாணவனின் பெற்றோருக்கு சிறைத்தண்டனை








அமெரிக்க பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச்சூடு நடத்தி நான்கு மாணவர்களைக் கொன்ற மாணவனின் பெற்றோருக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள ஒக்ஸ்போர்ட் உயர்நிலை பாடசாலையில் கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி ஈதன் கிரம்ப்ளே என்ற 15 வயது மாணவன் துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் நான்கு மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்த வழக்கில், தற்போது 17 வயதாகும் ஈதன் கிரம்ப்ளேவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதனிடையே, ஈதனின் தந்தை மற்றும் தாய் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

மகனை சரியாக கவனிக்கவில்லை என்றும் அவர்களது அலட்சியத்தால் ஈதன் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் தெரிவித்து வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது.

விசாரணையின் போது, புதிதாக வாங்கிய துப்பாக்கியை வீட்டில் பத்திரப்படுத்தவில்லை என்றும் தங்கள் மகனின் மனநலம் மோசமடைந்து வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டும் அதனை அலட்சியப்படுத்தியதாகவும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

வீட்டில் பாதுகாப்பற்ற துப்பாக்கி இருந்ததற்கான ஆதாரமும் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் மாணவன் ஈதன் தனது வீட்டு பாடத்தின்போது ஒரு துப்பாக்கி, ஒரு தோட்டா, காயமடைந்த நபரின் படங்களை வரைந்துள்ளார். இதையும் பெற்றோர் கவனிக்க தவறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இவ்வழக்கில் அவர்களுக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தடுக்கக்கூடிய வாய்ப்புகளை பெற்றோர் தவறவிட்டனர் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

# இத்தாலியில் நீர்மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் நால்வர் உயிரிழப்பு



இத்தாலியின் வடக்கு பகுதியில் உள்ள நீர்மின்னுற்பத்தி நிலையம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 4 பேர் பலியாகியுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

பொலோக்னா நகரில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மின்னுற்பத்தி நிலையம் ஒன்றிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த பகுதி தற்போது நீரில் மூழ்கியுள்ளதுடன் தீப்பரவலும் ஏற்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு இடம்பெற்ற பராமரிப்புப் பணிகளின் போது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மைத்திரி காட்டிய துணிச்சல்

நீலக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்கட்சி போர் - முரண்பாடு - உச்சமாகி இருக்கின்றது.

இந்தக் குழப்பங்களின் நடுநாயகமாக இப்போது இருப்பவர் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க.

இன்னும் இரண்டரை மாதங்களில் 79 வயதை எட்டப் போகும் சந்திரிகா குமாரதுங்க தான் இப்போதைய உட்கட்சி களேபரங்களின் சூத்திரதாரி என்பது எல்லோருக்கும் வெளிப்படையாக - அப்பட்டமாக - தெரிந்த இரகசியம்.

இதுவரையில் கட்சியின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கிளர்ந்தெழுந்திருக்கும் சந்திரிகா, மேற்படி சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் மைத்திரிபால சிறிசேனாவுக்கு கிடைக்கக் காரணமாக அமைந்த 2015 ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்து ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

1994,1999 ஆகிய ஆண்டுகளில் ஜனாதிபதி தேர்தலில் வென்று ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவுக்கு அடுத்த தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கவில்லை. அப்போதைய (இப்போதும் கூட மீண்டும் அதுதான்) அரசமைப்பு ஏற்பாடுகளின்படி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியாது. இந்த அரசமைப்புக் கட்டுப்பாடு சந்திரிகாவை இன்னொரு தடவை தனது அதிர்ஷ்டத்தை தேர்தலில் பரிசோதித்துப் பார்க்க இடமளிக்காமல் தடுத்துவிட்டது.

அதனால் கட்சியின் வேட்பாளர் நியமனத்தை அடுத்த நிலையில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு விட்டுக் கொடுத்து விலக வேண்டியவரானார் அவர். அத்தோடு கட்சியின் தலைமைப் பதவியும் அவரிடம் இருந்து மஹிந்தவுக்குப் போனது.

2005 மற்றும் 2010 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வென்று ஜனாதிபதியானார்.

மஹிந்த சும்மா இருக்கவில்லை. அரசமைப்பை மாற்றினார். ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் எத்தனை தடவையும் மக்களால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற கட்டுப்பாடற்ற ஏற்பாட்டைக் கொண்டு வந்தார்.

அந்த வாய்ப்பினால் தொடர்ந்து மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாகுவதற்காக 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் நின்றார். அப்போது அவரை எதிர்ப்பதற்கு எதிரணியில் பொது வேட்பாளர் யார் என்று தேடுதல் இடம் பெற்றது.

அதை ஒட்டியே இப்போது புதிய கருத்து - விடயம் - ஒன்றை முன் வைத்திருக்கிறார் சந்திரிகா அம்மையார்.

"மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அவருக்கு எதிரான பொது வேட்பாளராக என்னை நிற்கும்படி அழுத்தம் தந்தார்கள். நான் தான் மைத்திரிபால சிறிசேனை பரிந்துரைத்தேன். மைத்திரியின் வெற்றிக்காக உழைத்தேன். ஆனால் அதற்காக இப்போது கவலைப்படுகிறேன். சுதந்திர கட்சியை மைத்திரி அழித்து விட்டார்" - என்று வேதனை தெரிவிக்கின்றார் சந்திரிகா அம்மையார்.

அது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடம் உச்ச அதிகாரத்தில், அசைக்க முடியாதிருந்த காலகட்டம். அவருக்கு எதிராகப் பொது வேட்பாளராக அதற்கு முந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட - யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தின் தளபதியாக இருந்த - ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு நேர்ந்த கதியை எல்லோரும் அறிந்திருந்தனர். அந்தப் பட்டறிவு அனுபவத்தின் பின்னர் இன்னொரு தடவை ராஜபக்ஷவுக்கு எதிராக பொது வேட்பாளராக நிற்கப் பலருக்கும் கொலை நடுக்கமிருந்தது என்பதுதான் உண்மை.

அந்தத் தடவை ஜனாதிபதி வேட்பாளராக நிற்கக் கிடைத்த வாய்ப்பை சந்திரிகா குமாரதுங்க தானாக விரும்பி மைத்திரிபால சிறிசேனவுக்கு விட்டுக் கொடுத்து அவரைப் பரிந்துரைத்தாரா அல்லது பயத்தில் விட்டுக்கொடுத்து ஒதுங்கினாரா என்பது இன்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படும் விடயமாகத் தான் இருக்கிறது.

சரியோ பிழையோ, அச்சமயத்தில் கட்சியின் தலைவராக இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நம்பிக்கைக்குரிய சகவாகவும், அமைச்சரவையில் மூத்த பிரதிநிதியாகவும், கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேன, அவற்றை எல்லாம் ஒரே நாளில் துறந்து ஒதுக்கி விட்டுத் துணிச்சலுடன் முடிவெடுத்தே பொது வேட்பாளரானார். கரணம் தப்பினால் என்ற மாதிரியான அரசியல் முடிவு அது.

அந்த ஜனாதிபதி தேர்தல் முடிவு வரும் சமயத்தில் கூட விபரீதம் நேர்ந்து விடலாம் என்ற அச்சத்தில் மைத்திரி ஒளித்திருந்தமை மறக்கக் கூடியது அல்ல. மைத்திரியின் அன்றைய அரசியல் துணிச்சல் இப்போதைய உட்கட்சி அரசியல் களேபரங்களுக்கு மத்தியில் குறைத்து மதிப்பிடத்தக்கது அல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# தேனியில் நடைபயணம் மேற்கொண்டு ஆதரவு திரட்டுகிறார் மு.க.ஸ்டாலின்



நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றார்.

அந்தவகையில், தேனி தொகுதி தி.மு.க. வேட்பாளர் தங்கதமிழ் செல்வன், திண்டுக்கல் தொகுதி மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சச்சி தானந்தம் ஆகியோருக்கு ஆதரவு திரட் டும் விதமாக மு.க.ஸ்டாலின் நேற்று தேனி உழவர் சந்தை, பாரஸ்ட் வீதியில் நடைபயணம் மேற்கொண்டார்.

# நான் செல்லும் இடமெல்லாம் பா.ஜ.கவின் அலை வீசுகிறது

## தமிழகத்தில் பிரதமர் மோடி பிரச்சாரம்

"தமிழகத்தில் நான் செல்லும் இடங்களில் எல்லாம் பா.ஜ.கவின் அலை வீசுகிறது. மக்கள் அனைவரும் பேசத் தொடங்கிவிட்டனர். தி.மு.கவுக்கு விடை கொடுக்க தயாராகி விட்டனர். "

– இவ்வாறு கோவை மேட்டுப்பாளையத்தில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கோவை மேட்டுப்பாளையத்தில் நடந்த பா.ஜ.க. பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில், மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் கோவை, நீலகிரி, பொள்ளாச்சி தொகுதி பாஜக வேட் பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி பிரச்சாரம் மேற் கொண்டார்.

அந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசுகையில், "எனது அன்பான தமிழ் சகோதர, சகோதரிகளே வணக்கம். மேட்டுப்பாளையத்தின் இந்த புண்ணிய பூமியில் இருந்து உங்கள் அனைவரையும் வணங்குகிறேன். இப்பகுதியில் உள்ள மருதமலை முருகன், கோணியம்மனை வணங்கு கிறேன்.

மேட்டுப்பாளையத்துக்கு கோவையின் ஆற்றலும், நீல கிரியின் அழகும் பொருந்தியிருக்கிறது. இவ்வளவு தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த பகுதிக்கு வந்தால், ஒரு டீக்கடைக் காரருக்கு மகிழ்ச்சியாக இருக்காதா என்ன? விரைவில், தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடவுள்ள அனைவருக்கும் வாழ்த்துகள்.

தமிழகத்தில் நான் செல்லும் இடங்களில் எல்லாம் பா.ஜ.கவின் அலை வீசுகிறது. மக்கள் அனைவரும் பேசத் தொடங்கிவிட்டனர். தி.மு.கவுக்கு விடை கொடுக்க தயாராகி விட்டனர். அதனால்தான், நாம் கூறுகிறோம் மீண்டும் மோடி, வேண்டும் மோடி என்று.

தி.மு.க – காங்கிரஸ் உள்ளிட்ட குடும்ப கட்சிகளுக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான் இருக்கிறது. ஏதாவது பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஒரே குறிக்கோள். இப்படி பல தலைமுறைகளாக ஆட்சியில் இருக்கும் இவர்கள் கூறும் ஒரே பொய் வறுமையை ஒழிப்பதாக கூறுவதுதான். ஆனால்,



அவர்கள் இத்தனை ஆண்டுகளாக ஆட்சி செய்தும் நாட் டில் வறுமையை ஒழிக்கவில்லை. ஆனால், தேசிய ஜனநா யக கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த உடனே வந்த செய்த வேலை 25 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டிருக்கி றோம்.

தமிழகத்தில் ஏராளமான திறமையும், மனித ஆற்றலும் நிறைந்திருக்கிறது. ஆனால், தி.மு.க. அரசு இங்கு மிகுந்தி ருக்கும் மனித சக்தியையும், ஆற்றலையும் வீணடித்துக் கொண்டிருக்கிறது. கோவை பகுதியில் ஆடை தொழில் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஆடை தொழிலை காப்பாற்ற வேண்டிய திமுக அரசு, அத்தொழிலை முடக் கும் வகையில், மின் கட்டணங்களை உயர்த்தி வருகிறது. அதனால், வரக்கூடிய இழப்புகளை எல்லாம் மக்கள் மீது திணிக்கிறார்கள்.

தி.மு.க. எப்போதுமே ஒரு வெறுப்பு அரசியலைத்தான் செய்து வருகிறது. தி.மு.கவின் கவனம் எப்போதுமே தமி ழகத்தின் வளர்ச்சி மீது இருந்தது இல்லை. ஆனால், நான் உங்களுக்கு ஒரு உறுதி அளிக்கிறேன். என்.டி.ஏ. அரசாங் கம் மூன்றாவது முறையாக ஆட்சியமைத்து செயல்படும் போது, இந்த கொங்கு மண்டலம், நீலகிரியின் வளர்ச்சிக்காக இன்னும் வேகம்காட்டி வேகமாக செயல்படுவோம் என்று நான் உறுதியளிக்கிறேன்.

தி.மு.க. அரசும், இண்டியா கூட்டணியும் எதிர்ப்பு அரசி யல், வெறுப்பு அரசியலைத் தவிர உருப்படியாக எதையுமே செய்தது இல்லை." – என்றார்.

# மோடியை எதிர்த்து திருநங்கை போட்டி

இந்திய நாடாளுமன்ற தேர்தலில் உத்தரப்பிரதேசம் வார ணாசியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை எதிர்த்து திருநங்கையொருவர் போட்டியிடுகின்றார்.

உத்தரப்பிரதேசத்தின் நிர்மோகி அகாடா என்ற சாதுக்கள் அமைப்பைச் சேர்ந்த திருநங்கை மகாமண்டலேஸ்வர் ஹேமாங்கி சகி துறவியான அவர் இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இந்து மதத்தைப் பரப்பி வருகிறார்.

இந்த சூழலில் உத்தர பிரதேசத்தின் வாரணாசி மக்கள வைத் தொகுதியில் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்த்து அகில பாரத மகா இந்து சபையின் வேட்பாளராக மகாமண்ட லேஸ்வர் ஹேமாங்கி சகி போட்டியிடுகிறார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

:நான் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக போட்டியிட வில்லை. திருநங்கைகளின் உரிமைகளுக்கு குரல் கொடுப்



பதற்காக அரசியலில் களமிறங்கி உள்ளேன்." – என் றார்.




# யாழில் நோன்புப் பெருநாள்

உலக வாழ் முஸ்லிம்கள் நேற்று புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடினர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் புனித நோன்பு பெருநாள் தொழுகையும் குத்துவா பிரசங்கம் இடம் பெற்றன.

பைய்சர் ஹாசினி மதினி ஜும்மா மரியம் மஸ்ஜித் தலைமையில் ஒஸ்மானியா விளையாட்டு மைதானத்தில், நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்துவா பிரசங்கமும் இடம்பெற்றன.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டு தமது வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.







# கல்முனை ஹுதா திடலில் நோன்புப் பெருநாள்

**(எஸ்.அஷ்ரப்கான்)**

புனித நோன்புப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகை கல்முனை ஹுதா திடலில் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதியா ஜும்ஆ பள்ளி வாசல்களின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் எம்.எப்.எம்.ஜவ்ஸாத் (ஸலாமி) நிகழ்த்தினார். ஆயிரக்கணக்கான மக்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டமையுடன் பலஸ்தீனத்தின் காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.








# சாய்ந்தமருதில் நோன்புப் பெருநாள்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் பள்ளி வாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம் பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல். எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.






# வாழைச்சேனையில் நோன்புப் பெருநாள்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை குபா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்றுக் காலை 6.30 மணிக்கு செம்மண்ணோடை அல் ஹம்ரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என ஏராளமானோர் பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டனர்.

நோன்புப் பெருநாள் தொழுகையையும், குத்பா பிரசங்கத்தையும் மீராவோடை உம்மு சுலைம் பெண்கள் அரபுக் கல்லூரியின் தலைவரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மத் காஸிமி நடத்தினார்..









# மன்னாரில் நோன்புப் பெருநாள்

**(எஸ்.றொசேரியன் லெம்பேட்)**

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் மன்னார் மாவட்டம் சயீட் சிட்டி பொது மைதானத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரே நேரத்தில் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் இடம் பெற்றன

மன்னார் சயீட் சிட்டி பிரதம இமாம் எச்.என்.எம்.எம்.எஹியாகான் நோன்புப் பெருநாள் தொழுகை நடத்திப் பிரசங்கமும் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.



















# முள்ளிப்பொத்தானையில் நோன்புப் பெருநாள்

**(ஹஸ்பர்)**

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை ஒட்டி நேற்று நோன்பு பெருநாள் திடல் தொழுகை முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதனை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜும்மா பள்ளி நிர்வாகத்தினர ஏற்பாடு செய்திருந்தனர். தொழுகையை உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் மற்றும் மௌலவி முர்சித் ஆகியோர்க வழிநடாத்தினர்.










# மாளிகைக்காட்டில் நோன்புப் பெருநாள்

**(நூருல் ஹுதா உமர்)**

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் நேற்றுப் புதன்கிழமை மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மாளிகைக்காடு அந் நூர் ஜ/ம்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் வழமைபோன்று இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் அந் நூர் ஜ/ம்மா பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். மின்ஹாஜ் (உஸ்மாணி) அவர்களால் நடத்தப்பட்டன.




# மருதமுனை கடற்கரையில் நோன்புப் பெருநாள்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை இஸ்லாமிய பிரச்சார மையம், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் பாக்கியத்துசாலிஹாத் பள்ளி வாசல் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெரு நாள் தொழுகை நேற்று மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் காலை 6:20 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்தவெளி யில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகை யில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம். எல். முபாறக் (மதனி) நடாத்தினார்கள்.














# சமன் ரத்நாயக்கவின் விளக்கமறியல் நீடிப்பு



சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவின் பிணைக் கோரிக்கையை மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம நேற்று நிராகரித்தார்.

இதன்போது, பிணை வழங்குவதற்கான விசேட காரணிகள் ஏதும் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என நீதவான் கூறியுள்ளார்.

இதற்கிணங்க, சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஹெரோயினுடன் ஒருவர் திருமலையில் சிக்கினார்

திருகோணமலை தலைமையாக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுமேத்ராகம பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவரைத் தாங்கள் கைது செய்தனர் எனத் திருகோணமலை தலைமையகப் பொலி ஸார் தெரிவித்தனர் .

விசேட பொலிஸ் அதிரடிப் பிரிவுடன் இணைந்து தாங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர் எனத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயதுடைய நபர் ஒருவரிடம் இருந்து விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் 84 பக்கற்றுகளாகப் பொதி செய்யப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



கைது செய்யப்பட்ட நபர் ஒரு போதைப் பொருள் வியாபாரி எனவும், அவர் மீது ஏற்கனவே நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் அவர் இப்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை கைப்பற்றப்பட்ட போதைப் பொருளுடன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# இலங்கையில் அமைதி போராட்டங்களை நசுக்குவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

இலங்கையில் அமைதி வழியில் நடத்தப்படும் போராட்டங்களை நசுக்குவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

2022 மார்ச் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நடைபெற்ற 30 போராட்டங்களில், போராட்டக்காரர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் அதிக பலத்தை பிரயோகித்தனர் என சர்வதேச மன்னிப்பு சபையின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத பலவந்த பிரயோகத்திற்கு காரணமான அதிகாரிகளை நேரடி விசாரணைக்கு உட்படுத்தி சட்டத்தின் முன் நிறுத்தும் வரை இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பை அவசரமாக மீளாய்வு செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை , சர்வதேச சமூகத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

AMNESTY INTERNATIONAL

### கல்வி அமைச்சின் இணையத்தளம் முடக்கம்:

# உள்நாட்டு இணைய வலையமைப்பு மூலமே சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீதான சைபர் தாக்குதல், உள்நாட்டு இணைய வலையமைப்பின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சைபர் தாக்குதலை மேற்கொண்டது யார் என்பது தொடர்பில் அடையாளம் காண்பதற்காக இணைய சேவை வழங்குநர்களிடம் தகவல்கள் கோரப்பட்டுள்ளன என இலங்கை கணினி திடீர் பதிலளித்தல் ஒன்றியத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடங்கிய அறிக்கையொன்று கல்வியமைச்சுக்கு



கையளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சைபர் தாக்குதலுக்கு இலக்கான கல்வி அமைச்சின் இணையத்தளமானது தொடர்ந்தும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுகின்றது.




# பண்டிகை காலத்தில் விசேட போக்குவரத்து

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை 12 விசேட ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என திணைக்களம் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பண்டிகை காலத்தை முன்னிட்டு பயணிகளின் நலன் கருதி மேலதிக பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு பெஸ்டியன் மாவத்தை, மாகும்புர, கடுவளை, கடவத்தை ஆகிய பஸ் போக்குவரத்து முனையங்களில் இருந்து மேலதிக பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# பேச்சுவார்த்தைக்கு வராத முதலாளிமார் சம்மேளனம்

### தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு இழுபறி

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பான நேற்றைய சம்பள நிர்ணய சபை பேச்சுவார்த்தை எவ்வித இணக்கப்பாடுமின்றி தோல்வியில் நிறைவடைந்தது.

இன்றைய பேச்சுவார்த்தைக்கு முதலாளிமார் சம்மேளத்தின் பிரதிநிதிகள் வருகை தராமையே எவ்வித இணக்கப்பாடுகளும் எட்டப்படாமைக்கான காரணம் என தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான சம்பள நிர்ணய சபைக் கூட்டம் கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழில் ஆணையாளர்



தரப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் நேற்றைய பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருந்தனர்.

# முதலாளிமார் சம்மேளனத்திற்கு செந்தில் தொண்டமான் கண்டனம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள தொடர்பான பேச்சுவார்த்தைக்கு, இறுதி நேரத்தில் வருகை தராத முதலாளிமார் சம்மேளனத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவிருந்தது.



இந்த நிலையில், இந்த பேச்சுவார்த்தையில் முதலாளிமார் சம்மேளனம் கலந்துகொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

முதலாளிமார் சம்மேளனத்தின் அசமந்தப் போக்கே இதற்கு காரணம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விடயத்தில் உரிய தீர்வு கிடைக்காவிடின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு இல்லை

## விவசாய அமைச்சர் அறிவிப்பு

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு தேவையான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி, மரக்கறிகள், முட்டை, கோழி இறைச்சி மற்றும் பழங்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சடுதியாக அதிகரித்திருந்த மரக்கறிகளின் விலையும் அதற்கான தட்டுப்பாடும் தற்போது முற்றாக நீங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தின் கீழ், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிகள், பழங்கள் மற்றும் அரிசி என்பன தேவைக்கு அதிகமாகச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# அஸ்வெசும திட்டத்துக்கு 182,140 குடும்பங்கள் தகுதி

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை ஆராய்ந்ததன் பின்னர் மேலும் 182,140 குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, அவர்களுக்கு இது வரையில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை உள்ளிட்ட முழுமையான தொகை எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதே நேரம், இதுவரையில் 18,54,000 அஸ்வெசும பயனாளர்களுக்காக 58.5 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு முழுமையான தகைமைகளைக் கொண்டுள்ள 200,000 குடும்பங்கள் இது வரையில் தங்களது வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவில்லை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.04.2024

## மேஷம்

இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படு கின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடு வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது. சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப் புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.

## ரிஷபம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக் கியத்தில் கவனம் தேவை.

## கடகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## சிம்மம்

எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்ச்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச் சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.

## கன்னி

நீங்கள் விரைந்து பணிகளை முடிப் பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப் புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.

## துலாம்

உங்கள் செயல்களை கண் காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும். பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

## விருச்சிகம்

இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப் படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.01.2024

## தனுசு

இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

## கும்பம்

உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

## மகரம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

உங்கள் விருப்பங்களை எளிதில் அடைவதற்கு இது சாதகமான நாள். கடினமான சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணியில் நற்பெயர் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை நிலை உயரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் பராமரிக்க இயலும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman


CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park